சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் 17.09.2025
வா.சா.1 –காந்திமதி க/பெ.கோவிந்தராஜன்
O.S. No.275/2024
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை குணசேகரன் எழுத, பிரதிவாதி பூவம்மாளுக்கு கொடுத்தேன். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை கொடுத்த பின்னர் தான் ரூபாய் 2,00,000த்தை 500 ரூபாய் தாள்களாக கொடுத்தேன். வா.சா.ஆ.1 எழுதும் போது பூவம்மாள் வேறு பேனா எதுவும் வைத்திருந்தாரா என்றால் இல்லை. மேற்படி வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு எழுதும்போது, ஒரே பேனாவால் தான் எழுதினோம். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு வாசகங்கள் ஒருபேனாவாலும் கையெழுத்து பகுதி மற்றொரு பேனாவாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் பூவம்மாள் கையில் இருந்த பேனாவால் கையெழுத்து செய்தார் என்று சாட்சி குறிப்பிடுகிறார். பூவம்மாள் மாமியார் மீனாட்சியை எனக்கு தெரியும். கிரைய பத்திரத்தை மீனாட்சி பெயரில் உள்ளதை பூவம்மாள் தான் என்னிடம் எடுத்து வந்து கொடுத்தார். வழக்கு கடனுறுதி சீட்டு எழுதிய காலகட்டத்தில் பூவம்மாளுக்கு நான் 17.07.2022 அன்று 2 லட்சம் ரூபாய் ரொக்கமாக கொடுக்கவில்லை என்றும் அதற்கு முன்பாகவே நான் பூவம்மாளிடம் பணம் வரவு செலவு செய்துள்ளதை பயன்படுத்தி நான் ஆவணங்களை உற்பத்தி செய்து வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து, கையொப்பம் இட்டுள்ள பகுதிக்கும் விபரங்கள் எழுதப்பட்ட பகுதிக்கும் வேறுபாடு உள்ளது என்றும் வெவ்வேறு பேனாவினால் எழுதப்பட்டுள்ளது என்றும் அதை வைத்தே வெற்று கடனுறுதி சீட்டில் மோசடியாக கையெழுத்து செய்து அதை பின்யோசனையுடன் பூர்த்தி செய்து கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல.வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில்

சாட்சி கையெழுத்து போட்ட சந்திரசேகர் தற்போது உயிருடன் இல்லை. மற்றொரு சாட்சி செல்வராஜ் ஆவார். மேற்படி 2 சாட்சிகளும், நான் சொல்லியதை அடித்து கையொப்பம் செய்தார்களா என்றால் பூவம்மாளும் தான் கையொப்பம் இட சொன்னார். நாங்கள் வழக்கிற்காக வா.சா.ஆ.1 ஆவணத்தை உற்பத்தி செய்து எங்களது வசதிக்கேற்ப பூர்த்தி செய்து வா.சா.ஆ.1 ஆவணத்தை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.09.17 06:20:20 +0530

Sub Judge

Melur